உ

சிவமயம்.

ஸ்ரீ சுவாமிநாத சுவாமி துணை

திருக்குடந்தை ஸ்தலமான்மியம்

என்னும்

# மகாமஹாமகத்துவம்.

இதில்

சிவாலய தரிசன விதிகள், கும்பகோண ஸ்தலபுராணம்,
மகாமககுளத்தின் மகிமை, அதில் ஸ்நானாதி முத்தி
அடைந்தவர்களின் சரித்திரங்கள், சிவக்ஷேத்
திரங்களின் திருநாமதேயங்கள், அவை
கள் ஒன்றுக்கொன்று இருக்கும்
கடிகை வழிகள் முதலியன
அடங்கியிருக்கின்றன.

---

கும்பகோணம் "தென் இந்திய மித்திரன்"
பத்திராபராயிருந்த
**தண்டலை - வீரராகவ செட்டியாரால்**
இயற்றப்பட்டது.

---

**MADRAS.**

**T. V. CHETTY & CO.,**

*Book-Sellers and Publishers.*

**MOUNT ROAD.**

21

[Registered Copy Right]

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY MADRAS 41

# K. S. MUTHIAH & Co

**SILK HOUSE,**

**BENARES CITY AND MADRAS**

முத்தையாவின

## [illegible] பட்டுப் புடவை

இந்த [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

| | | |
|---|---|---|
| 12 முழ × 14 | புடவை 1-க்கு ரூபாய் | |
| 16 முழ × 44 | ,, | ,, |
| 18 முழ × 44 | ,, | ,, |

இன்னும் பலவிதமான பட்டு [illegible] கேட்டால் [illegible] எழுதிக்கொள்ளவும்

**கே. எஸ். முத்தையா அண்டு கோ.,**

சில்க் ஹவுஸ், க

பிராஞ்சு ஆபீஸ் —

**கே. எஸ். முத்தையா அண்டு கோ.,**

188, கோவிந்தப்ப நாய்க்கன் தெ

உ

சிவமயம்

சுவாமிநாதஸ்வாமி துணை

திருக்குடந்தைச் ஸ்ரீசார்ங்கபாணிஸ்வாமியார்

என்னும்

# மகாமஹமகத்துவம்.

இதில்

ஸ்தலமூர்த்தி விசேஷங்கள், கும்பகோண க்ஷேத்ர புராணம்,
மஹாமகதீர்த்தத்தின் மகிமை, அதிலாடி முக்தி
அடைந்தவர்களின் சரித்திரங்கள் சிவ விஷ்ணு
ஸ்தலங்களின் திருநாமதேயங்கள், அவை
கள் ஒன்றுக்கொன்று இருக்கும்
கடிகை வழிகள் முதலியன
அடங்கியிருக்கின்றன.

கும்பகோணம் "தென் இந்திய மித்திரன்
பத்திராதிபராயிருக்க
தண்டலை வீரராகவ செட்டியாரால்
இயற்றப்பட்டது.

இரண்டாம் பதிப்பு அநேக சித்திரங்களுடையது.

MADRAS
T. V. CHETTY & CO.,
*Book-Sellers and Publishers.*
MOUNT ROAD.

1921.

[Registered Copy Right]

புஸ்தகம் கிடைக்குமிடம்.

---

தண்டலை - வீரராகவ செட்டியார்.

15, அருணாசல நாயக்கன் ரோட்,

சிந்தாதிரிபேட்டை

மவுண்ட்ரோட், சென்னை.

---

நூதன் விலை அணா 8.

தபால் செலவு பிரத்தியேகம்.

உ

சிவமயம்.

# முகவுரை.


திருக்குடந்தைஸ்தலமான்மியம் எனும் மகாமகத் தத்துவமாகிய இந்நூலை யான் எழுதப் புகுந்ததன் காரணம் சமீபத்தில் கும்பகோணத்தில் நடைபெற இருக்கும் மகாமகத்திற்கு வரும் புண்ணியகோடிகள் பலருக்கும் உபயோகமாகும் பொருட்டேயாம். சிவாலய தரிசன விதிகள், கும்பகோண தல புராணம், மகாமகக்குளமகிமை, அதில் நீராடி முத்தியடைந்தவர்களின் வரலாறு, சிவத்தல திருநாமதேயங்களும், அவற்றிற்குச் செல்லும் மார்க்கம் முதலியனவும் இதில் சேர்க்கப்பட்டு யாத்திரிகர்கட்கு ஓர் வழிகாட்டியாகவும் இப்புத்தகம் ஆக்கப்பட்டிருக்கிறது. கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்கும் பயன்படுமாறு எளிய செந்தமிழ் நடையில் கத்திய ரூபமாக எழுதப்பட்டுள்ளது. பல்லோர்க்கும் பயன் தருமாறு வெளிவந்துள்ள இந்நூல் சென்னையில் பிரக்யாதிபெற்ற ஸ்ரீமான் லாட் கோவிந்ததாஸ் அவர்கள் பரோபகாரச் சிந்தைக்கே அர்ப்பணஞ் செய்யப்பட்டுள்ளது. இந்நூலுக்கு என்பால் அன்புற்று முகவுரை தந்த சுதேசமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் அ. அரங்கசாமி ஐயங்கார் அவர்களுக்கு என்றும் இடையறா நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது லௌகிகத்தொழிலினின்றும் கிடைத்த ஒழிவு நேரத்தை வீண்போக்காமற்படி இப்புத்தகம் வெளிவரும் விஷயத்தில் இரண்டாம் முறையாக யான் செலவிட்டு, முன்னினும் பலமுக்கிய விஷயங்களைச் சேர்த்திருப்பதில் ஏதேனும் குற்றங் குறைகள் இருப்பின் அறிவாளர் க்ஷமித்து அடுத்த பதிப்பிற்குப் போகுமாறு அறிவிப்பார்களாக.

சென்னை,
20—2—1921. } தண்டலை—வீரராகவ செட்டி.

16, தங்கம் வெள்ளி மெடல்கள் பரிசுபெற்ற
டி. ஏ. ரஹமான் அண்டு ஸன்ஸ் அவர்களின்

# ஆட்டோ தர்பார்.




ரஹிமானியா ஆட்டோ தர்பார் ஸெண்டு எல்லோருக்கும் அவசியமானது. இது தொத்துவியாதி முதலியவற்றை போக்கடித்து மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது. இதில் ஒன்று அல்லது இரண்டு துளிகளைக் குட்டையிலாவது அல்லது மேலே போட்டுக்கொள்ளும் குட்டைகளிலாவது போட்டால் 5-நாள் வரைக்கும் இதனுடைய பரிமளம் போகாமலிருப்பது திண்ணம்.

மாகேஸ் புட்டி 1-க்கு ரூபா 1—0—0

## ரஹிமானியா பரிமளகூந்தல் தைலம்



இத்தைலம் மயிர்களுக்கு பலம் கொடுக்கத்தக்க அநேக வனமூலிகைகளினாலும், வாசனை திரவியங்களினாலும் சேர்த்து தயாரிக்கப்பட்டது. இதை பிரதிதினம் உபயோகித்துவந்தால் சுண்டு முதலியவைகளைப் போக்கடித்து, உஷ்ணத்தை சாந்தம் செய்து மனதிற்கு சந்தோஷத்தையும் சுகமான வாசனையையும் கொடுப்பதல்லாமல், மயிர்களுக்கு கறுப்ப நிறமும், நீண்ட வளர்த்தியும் கொடுக்கத்தக்க சக்திவாய்ந்தது இதுவன்றே.

புட்டி 1-க்கு அணா 14.

## பரிமள பாக்குத்தூள்.

நமது பரிமள பாக்குத்தூளை உபயோகித்தால் வாய் உலர்ந்து போவதையும் கெட்ட வாசனையையும் எடுத்து ஜீரணக்கருவிகளைப் பலப்படுத்தி உமிழ்நீரை விருத்திசெய்வதில் கனவான்களுக்கு ஒரு வீட்டுத் தோழனைப்போல் விளங்கி வருகிறது. இது நல்ல குணமுள்ள பாக்குகளுடன், குங்குமப்பூ, பச்சைகற்பூரம், கஸ்தூரி, வெள்ளிரேக், வெள்ளரிவிரையுடன் கலந்து சாஸ்திரோக்தமான முறைகளின்படி பலவாறாக பக்குவப்படுத்தி தயார் செய்யப்பட்டது. இம்மாதிரி பாக்கு கிடைப்பது அரிது. இதன் பெருமையை அநுபவித்து அறிய வேண்டுவதேயன்றி எடுத்துரைக்கலாகாது.

பெரிய டின் விலை ரூபா. 1, சிறிய டின் அணா 8.

# மகாமக மகத்துவம்.

ஸ்ரீமான் தண்டலை—வீராகவ செட்டியார் அவர்களியற்றிய இந்நூல் இச்சமயம் மகாமக யாத்திரையை உத்தேசித்து ஸ்ரீ கும்பகோணம் செல்லும் நம்மகாஜனங்களுக்கு மிக உபயோகமுள்ளதாயிருக்குமென்பதை நான் கூறத் தேவையில்லை. ஸ்தலபுராணத்தாலும், பல புராணிகர்களாலும் போற்றப்பட்ட இக்குடந்தைமாநகர் சைவ, வைணவ, மத்வ மதஸ்தர்கள் யாவர்க்கும் பொதுவாகிய புண்ணிய ஸ்தலமாயும், தீர்த்தங்களையும் உடையதாயுள்ளது. அவற்றின் தரிசன மகிமைகளையும், தரிசனம். தொழுகை முதலியவற்றின் முறைமைகளையும் சுருக்கமாகவும், ஸாமானிய ஜனங்களும் எளிதில் உணருமாறு இனிய தமிழ் நடையில் புத்தக ரூபமாய் ஸ்ரீமான் தண்டலை—வீராகவ செட்டியார் வெளியிட்டிருப்பது மிக உபகாரமான காரியமாவதுடன் ஓர் பெரும் புண்ணிய கைங்கரியமாகும். இந்நூலினால் நம்மனோர்கள் பலரும் ஆஸ்திக புத்தி அதிகரித்து தெய்வபக்தி மிகுந்து தர்மாசரணத்தில் தழைத்து மேம்பட்டொழுகுவார்களாக.

சென்னை,
19—2—21.

அ. அரங்கசாமி அய்யங்கார்,
பி. ஏ., பி. எல்.,
சுதேசமித்திரன் பத்திராதிபர்.

THIS BOOK

IS

DEDICATED

TO

LODD GOVINDAS GARU,

Zemindar of Narayanavaram,

AS A TOKEN

OF THE

AUTHOR'S ADMIRATION

OF HIS

Large-hearted and varied activities in the cause of the well-being of the people of the Madras Presidency.



Lodd Govindoss, Zemindar.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
15024

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருக்குடந்தை ஸ்தலமான்மியம்

என்னும்

# மகாமக மகத்துவம்.

கடவுள்—வணக்கம்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாகிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

விநாயகர் வணக்கம்.

ஒரு கொம்பிரண்டு செவிமூன்று மத நால்வாய்
பொரு செங்கையைந்துடைய புத்தேள்—வருகங்கை
யாறுதரித்தோன் மைந்தனை முகத்தோனை நினைந்
தேழு பிறப்புந் தீரவெட்டு.

மகாமகம் என்பது பன்னிரண்டு வருஷத்திற்கொரு முறை திருக்குடந்தை என்னும் கும்பகோணம் புண்ணிய நகரில்நடக்கும் திருவிழாவின் கடையில் நீராடும் நாள்.

---

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி.

இந்நாளில் இமயமலைமுதல் சேதுவரையிலுள்ள எல்லா இந்து மகாஜனங்களும் ஒருங்குசேர்ந்து, இந்நாளை நன்னாளாகக் கொண்டாடி பலநாள் யாத்திரைசெய்து, கும்பகோணத்தில் அக்கினிமூலையில் உள்ளதோர் வாவியில் நீராடுவது வழக்கம். இவ்வாவி அமுதம் தங்கியதால் 'அமுதவாவியென்றும்' எல்லாத்தீர்த்தங்களும் ஒரு வருஷத்திற்கு முந்தியே இக்கும்பகோணம் வந்து மகாமக தீர்த்தத்தில் சேருகிற காரணத்தால் பகு தீர்த்தமென்றும், கங்கை, யமுனை, சரஸ்வதி, சிந்து, காவேரி, முதலிய ஒன்பது தீர்த்ததேவதைகளாகிய கன்னிகைகளும் வந்துசேர்ந்து, அங்கேயே வாசம்பண்ணுகிறபடியால் கன்னியா தீர்த்தமென்றும், தேவகுருவாகிய பிரகஸ்பதி சிம்மராசியில் சேர்ந்து, அந்த சிம்மராசிக்கு உடையவனாகிய சூரியன், தனது புத்திரனும் சனியன் வீட்டுள் கும்பமாகிய ஏழாமிடம் சார்ந்து நின்று, மகநட்சத்திரத்தில் பௌர்ணமியில் சந்திரன்வந்து, சிம்மத்தில் நிற்கிற குருவுடன்சேர, இவ்விருவரையும் சூரியனும், சூரியனை இவ்விருவரும் முழுப்பார்வையுடன் பார்க்கிற நாளில், இந்நீராடுவது எல்லா ஸ்தலபுராணங்களிலும் கொண்டாடப்பட்டதால், இத்தீர்த்தத்திற்கு மகாமகதீர்த்தமென்றும் பெயர் உண்டாயிற்று.

இத்தீர்த்தத்திலுள் ஸ்நானம் செய்யப்பட்டவர்கள அனைவர்களுக்கும், அவரவர்கள் விரும்பும் பலன்களை எந்நாளும் தருவதாயினும், மகாமகநாளானது மற்ற நீராடும் நாட்களுள் முதன்மையானது என எல்லா புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த மகாமகம் பிரபவ வருஷம் முதலாகிய அறுபது வருஷங்களுள், ஒருவருஷத்தில் சிம்ம இராசியில் வந்த குரு, சுற்றிவந்து, இராசிக்கு ஒவ்வொரு வருஷமாக இருந்து,

மறுபடியும் அந்தச் சிம்ம இராசிக்கு வரப் பொதுவாகப் பன்னிரண்டு வருஷம்செல்லும் என்று நினைத்து, பவ, விய, விளம்பி, சாதாரண, துந்துபி, வருஷங்களில் வர வேண்டுமென்று "பவே, வியே, விளம்பேச, ததா, சாதாரணேபிச, துந்துபௌசம்ஹரா, பாக, மஹா மகாபப்ரகீர்த்திதா:" என்றும், குருவினுடைய அதிசாரத்தினாலும்* வக்கிரத்தினாலும்†

முன்சொன்ன வருஷங்களிற்கு ஒருவருஷம் முன்னாகிலும் பின்னாகிலும் வருவதுமுண்டு என்பது தோன்ற "அதிசாரே அதவாவக்ரே ஜீவே ஸிம்மகதேஸதி மாகாப்தே மாகமாஸேது மஹா மாகவிருதம் சரேத்" என்றும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

மகாமக ஸ்நானம் என்பதை ஒருநாள் முழுக்காக எல்லாரும் கொண்டாடினாலும், அது நான்கு நாள் அநுஷ்டிக்க வேண்டிய ஒரு விரதம். இவ்விரதம் வடக்கே சில தேசங்களிலுள்ள தீர்த்தங்களில் அநுஷ்டிப்பதும் உண்டு. ஆனால், இக்கன்னியா தீர்த்தத்தில் அநுஷ்டித்து நீராடுவதுபோல் அவ்விடங்களில் மகத்துவம் இராதெனத் தோன்றுகிறது.

இம்மகாமகமகத்துவம் என்னும் சிறு புத்தகத்துள், இந்த ஸ்தலத்திற்குக் கும்பகோணம் எனப் பெயர் வந்த காரணமும், கும்பகோண யாத்திரையுள் முக்கியமாகிய பஞ்சக்ரோச க்ஷேத்திரயாத்திரை, பதி[illegible] ஸ்தலயாத்திரை முதலியவை

---

*அதிசாரம் என்பது ஒவ்வொரு நட்சத்திரத்தின் நான்கு பாதங்களில் ஒவ்வொரு பாதத்திலும் இருக்கவேண்டிய நாட்கள் இராமல், சீக்கிரமாக வேறு பாதத்திற்காவது, நட்சத்திரத்திற்காவது செல்வது.

† வக்கிரம் என்பது இவ்வாறு ஒரு பாதத்திலிருந்து மற்றொரு பாதத்திற்குச் சென்று திரும்பித் தான் முன்னிருந்த நட்சத்திரத்திற்காவது பாதத்திற்காவது செல்வது.

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் அவுஸ், ஸ்ரீகாசி & சென்னை.

களும் அவற்றின் மகத்துவமும், மகாமக தீர்த்த மகத்துவமும் மகாமக விருதநியமமும், நவகன்னியர் பூஜையும், அங்கு செய்யப்படும் தானங்களும், அவற்றின் பலன்களும், அத்தீர்த்தங்களில் நீராடியதால் நினைத்த பலன்களை அடைந்தவர்களின் சரித்திரங்களும் வெகு சுருக்கமாக அடியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றின் முழு விவரங்களும் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் பெரிய ஸ்தலபுராணத்தை வாசிக்கத் தெரியவரும்.

---

## முதலாவது—அத்தியாயம்.

---

### இந்த ஸ்தலத்திற்கு கும்பகோணம் என்னும் பெயர் வந்ததற்கு காரணம்

கும்பகோணம் என்பது, ஆதியில் பிரமனானவன் பிரளய காலம்* சமீபத்தில் வருவதையும், அவற்றால் உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளெல்லாம் அழிந்துவிடுமென்பதையும் அறிந்து, அவற்றைத் திரும்பிப்படைக்க வகையறியாதவனாய், மனம் வருந்திக் கைலாயபதியாகிய சாக்ஷாத் சிவபெருமானிடம் சென்று, ஏ! கிருபாநிதியே!! சீக்கிரத்தில் வரக்கூடிய பிரளயத்தால் உலகத்திலுள்ள எல்லாப் பிராணிகளும், தாவரவர்க்கங்களும் அழிந்து போய்விடுமாதலால், அவற்றை மறுபடி உண்டாக்கும் வகையை உபதேசித்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, அதற்குப் பரமன், ஓய் கமலோத்பவா! நீர் ஒன்றுக்கும் அஞ்சாது அமிர்தம்விட்டுப் பிசைந்த மண்ணால் ஓர் கலசம் செய்து, அதில் அமுர்தம் ஊற்றி மண் சேர்

---

* பிரளயம் என்பது உலகமுழுவதையும் முழுகச்செய்யும் பெருவெள்ளம்.

த்து, * சிருஷ்டிபீஜத்தைப் புதைத்துச் சுற்றிலும் வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலியவைகளை வைத்து, அமுர்தத்தால் நிரப்பி மகா மேருவின் தென்பக்கத்தில், ஓர் இடத்தில், ஓர் உறியில் வைத்துவிடும் என திருவாய்மலர்ந்தருளினார் அதைக் கேட்ட பிரமன் உடனே அவ்வாறு ஓர் கலசம் செய்து, அமுர்தம் நிரப்பி, பீஜத்தைத் ஊன்றி, அக்கும்பத்துக்கு நூல் சுற்றி, மாவிலை செருகி, அதன்மீது தேங்காய் வைத்து, அதன்மீது பூமாலையும், தருப்பமும் சார்த்தி, வில்வம், சந்தனம் முதலியவைகளால் பூஜைசெய்து மேருவின் தென்பால் ஓரிடத்தில் ஓர் தூக்கில் வைத்தனன்.

பிறகு சிறிது காலத்திற்கெல்லாம் பெருங்காற்றுடன் கலந்த ஒரு பெருமழையால் பிரளயமுண்டாகி அண்ட சராசரங்களெல்லாவற்றையுமழித்து மற்றெல்லாம் தன்னுள்ளடக்கி, எழுந்து மேருவையும் முழுகச்செய்தது.

மேருவில் பிரமனால் வைக்கப்பட்ட கடம் தருப்பை, பூமாலை, தேங்காய், மாவிலை, வில்வம், உறி முதலியவைகளுடன், வெள்ளத்தில் மிதந்து, தென்திசையில் சென்று, பிறகு காற்றினாலடித்து மறைந்து முடிவாக ஓர் எல்லையுள்ள கடையில், அதன் மீதுள்ள தருப்பையும், மாவிலையும் ஓரிடத்தில் அகப்பட விழ, மாவிலை, வன்னிமரமாகவும், அம்மாத்தடியில் அத்தருப்பை ஓர் இலிங்கவடிவமாகவும் தோன்றி, அவ்விடம் சமிவனமென்றும், அவ்விலிங்கம் சமிவனேசரென்றும், தருப்பை இலிங்கமென்றும், சாக்ஷீசர் என்றும் பெயருடையதாயிற்று. இந்த இலிங்கத்தை அந்த ஒன்பது கன்னியர்களும் ஜலரூபியாய்ச்

* சிருஷ்டிபீஜம் என்பது எழுவகைத் தோற்றமும், நாற்பிறப்பு முடைய எல்லா ஜீவன்களையும், மலை, தடம் முதலியவைகளையும் தன்னுள் அடக்கியிருக்கும் ஓர் சிறு வித்து எனச் சொல்லப்படும்.

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் அவுஸ், ஸ்ரீகாசி & சென்னை.

ஆழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிறகு, கடம் இந்த ஸ்தலத்திற்கு அக்கினி மூலையில் ஒன்றைக் * குரோச தூரத்தில் சென்றவுடன், சாக்ஷாத் சிவபெருமான் திருவருளால் " இந்த ஸ்தலம் இப்பூமியிலுள்ள எல்லா க்ஷேத்திரங்களிலும் மேன்மையுடையது " எனவொரு அசரீர வாக்குண்டாயிற்று. தேவர்களெல்லாம் புஷ்பமாரி பொழிந்தார்கள். வெள்ளமும் கொஞ்மாய், வடிய கலசமும் அசையாது அவ்விடத்திலேயே தங்கியது. அக்கும்பத்தைத் தொடர்ந்து சென்ற பிரமன், இவையனைத்தையும் கண்டு ஆநந்தமடைந்தான். பூமியில் தங்கிய கும்பமிருந்த சிக்கம், கலசத்திற்குச்சற்றுக் கீழ் பக்கத்தில் வீழ்ந்து ஒரு சிவ க்ஷேத்திரமாயிற்று, † கடத்தின் மேலிருந்த தேங்காய், அக்கினி மூலையிற் சென்று, பூமியில் பதிந்து செவ்விள நீர்மயமாகி அதனடியில் அக்காயின் குடுமி வடிவாக சிவ இலிங்கம் உண்டாய் நாரிகேள இலிங்கமெனப் பெயர் பெற்றது. இவர்க்குத்தான் அமுதநாதர் எனவும் பெயர் வழங்கிவருகிறது. சிக்கம் விழுந்த இடத்திற்குக்கீழ்பால், இரண்டுபாணதூரத்தில் அதிலிருந்து வில்வம் விழுந்து, வில்வ வனமாகி, அவ்விடத்தில் பாதாள இலிங்கேசர்

* ஒரு குரோசம் என்பது முக்கால் நாழிகை வழி யென்றும், இரண்டு நாழிகை வழியென்றும், இரண்டரை நாழிகை வழியென்றும் உலகவழக்கமாயினும், இங்கு கூறியது இரண்டரை நாழிகை வழியே யென்று திருக்குடந்தைப் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

† இந்த ஸ்தலந்தான் இப்போது சோமநாதன் கோவில் என வழங்கப்பட்டு வருகிறது. இக்கோயில் கும்பகோணம் டவுன் மத்தியில் இருக்கின்றது.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,

உண்டாயினர். * அமுதநாதனுக்கு எழுபாணதூரம் மேற்கே பூநூல் வீழ்ந்து இலிங்கமாகி உபவீதேசர் எனப் பெயர்பெற்றது. † இவ்வாறு பல க்ஷேத்திரங்கள் உண்டாவதற்கு அந்தக் குடமே காரணமாதலால், அக்குடம் க்ஷேத்திர பீஜகும்பமெனப் பெயர்பெற்றது.

பிறகு உமாபதியானவர் அக்கும்பத்தைப் பார்க்க வேண்டி, உலகத்தார் உய்யும்பொருட்டு ஓர் வேடனுருக்கொண்டு, தமது பரிவாரங்களுடன், அநேக இடங்களைப் பார்த்துக்கொண்டே, திருவிடைமருதூர், என்னும் ஸ்தலத்திற்குக் கீழ்ப்பக்கத்தில் வந்து நின்று, மேற்றிசையை நோக்க கும்பம் தெரிவதைப் பார்த்துத் தனது பரிவாரங்களுடன், "இக்கும்பத்திலுள்ள அமிர்தம் கொட்டுண்டு, எப்பக்கமும் வழிந்தோடச் செய்கிறேன்" என்று சொல்லித், தனது பாணங்களில் சில பாணங்களை வேடிக்கையாக விடவும் அவை அக்குடத்திற்குச் சமீபத்திலேயே விழுந்துவிட்டன. கூட வந்தவர்களுள் அறக்காப்பாளனாகிய சாத்தா ஓர் பாணத்தை எடுத்துக் கொடுக்க சாக்ஷாத் பரமசிவன் அதை வாங்கி அவனை நோக்கி ஐய! "இவ்வம்பினால் அவ்வமிர்த குடம் உடையாது. அதை நீ பார்ப்பாய்" என்று சொல்லி வில்லில் நாணேற்றி, அவ்வம்பை விடவும், அது அக்குடத்திற்கு யாதொரு தீங்கும் செய்யாதொழிந்தது. இதைக் கண்டு மனம் வருந்திய சாத்தாவை கிராதனாகிய பரமன் மிகவும் தேற்றி, "நீ இன்று முதல் ஏக பாண சாத்தா எனனும்

* இந்த ஸ்தலந்தான் இப்போது நாகேசுரன் கோயில் என வழங்கப்பட்டு வருகிறது. இதுவும் டவுன் மத்தியில் இருக்கிறது.

† இந்த ஸ்தலந்தான் கவுதமேசர் கோயில் என வழங்கப்பட்டு வருகிறது. இதுவும் டவுனுக்கு மத்தியில் இருக்கிறது

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் அவுஸ், ஸ்ரீகாசி & சென்னை.

பெயருடையவனும், இவ்விடம் பாணவண்டுறை யென்றும் பெயருடையதாயும் ஆகுக" வென வரமளித்து, அச்சாத்தாவை அங்கு வைத்துத் தான் தன்னுடைய தூணியினின்றும், ஓர் அம்பை யெடுத்துக் கொஞ்சதூரம் மேற்கே சென்று, அக்கலசத்திற்கு ஈசான்னிய திக்கில் நின்று, அக்கணையைத் தொடவும், அது விரைந்தோடி அக்கலசத்தின் மூக்கை யுடைத்துக் கடத்தையும் தவிழ்த்து அவ்வுடைந்த முகத்துவாரத்திற் கிளம்பி, அக்கினி மூலையிற் சிறிது தூரத்தில் விழுந்து, ஓர் சிவ லிங்கமாய் நின்று அந்த விடத்திற்குக் குடவாயி லென்றும், அவ்விலிங்கத்திற்கு கோணேசரெனவும் பெயருண்டாயிற்று. அவ்வேடன் நின்று பாணம் விட்ட விடம் பெரிய க்ஷேத்திரமாய் இடம்பாணபுரியென்றும் இலிங்கம் பாணபுரீச ரெனவும் வழங்கப்பட்டு வருகின்றன.

பிறகு உடைந்த மூக்கின் வழியாகக் கடத்தி லிருந்த அமிர்தம் கொட்டுண்டு, சுற்றிலும் பாய்ந்து யோசனை தூரம் நனைத்தது. பின் அமிர்தம் வருகிற வழியே சென்று, குடத்துக்குச் சமீபமாய்ப் போய், குடத்திற்குக் கிழக்கே சமீபத்திலும், அக்கினி மூலையில் கொஞ்ச தூரத்திலும், அமிர்தம் தங்கும்படிக்குப் பூமி சிறிது இடம் கொடுக்க வேண்டுமென நினைக்கப், பூமி வெடித்து அவ்வாறே அமிர்தம் தங்க இடங் கொடுக்க, இரண்டு அமிர்தவாவிகள் உண்டாயின.*

பிறகு கிராதனுகிய சிவபிரான் அக்குடத்திற்குச் சமீபத்தில் சென்றவுடன், தண்ணீர் வடிந்து நல்லதரை யுண்டாயிற்று. உடனே அமிர்தத்தால் நனைந்த மண்ணைச் சேர்த்

* இந்த வாவிகளின் பெயர்கள் ஒன்று பொற்றமரைத் தீர்த்த மென்றும், மற்றொன்று மகாமக தீர்த்த மென்றும் பெயர் வழங்கி வருகிறது.

துப் பிடித்து, ஓர் இலிங்கமாக்கி அவ்வுடைந்த குடமூக்கில் வைத்துத்தானே அவ்வமுர்தத்தால், அவ்விலிங்கத்தை மஞ்சனமாட்டிப் பூசித்துப் பிரமாவும், எல்லாத்தேவதைகளும் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விலிங்கத்துட் சென்று மறைந்தார். உடனே தேவதைகளெல்லாம் உலகத்திற்கு மங்களத்தை உண்டாக்கவேண்டி, கைலாயத்தினின்றும் உமையை அவ்விலிங்கத்திற்கு இடப்பாகத்தில் எழுந்தருளச்செய்து, பூசித்து மங்களநாயகி யென அழைத்தார்கள். இவையெல்லாம் நடந்தது மாசி மாதத்தில் என தெரியவருகிறது. பிரமன் ஆதிகும்பேசருக்கும், மங்களநாயகிக்கும் ஆலயம் சமைத்து உற்சவம் செய்யத்தொடங்கி, ஒன்பது நாள் உற்சவம் செய்த பத்தாம்நாள் அமுர்தவாவியும் அமிருத நீராகி. மகாமகதீர்த்தத்தில் சுவாமியை தீர்த்தங்கொடுக்கச் செய்தார்கள். இவ்விதமாக ஒவ்வொரு வருஷமும், பிரம உற்சவம் நடத்துவதாக ஐதீகம் என புராணங்களினால் தெரியவருகிறது.

இவ்வாறு உடைந்த குடமூக்கின் வழியாக அமுர்தம் நாற்புறமும், பாவியதால் கும்பகோணமென்றும்; உடைந்த மூக்கின் மேல் பரமசிவன் மண்ணைப்பிடித்து இலிங்கமாக வைத்துப் பூசித்ததால் கும்பகோணம் என்றும்; (கோணம்-மூக்கு) பெயருண்டாயிற்று. அது தமிழில் மரூஉச்சொல்லாய்க் குடந்தை என்றும் வழங்கலாயிற்று. படைப்புக் காலத்திலேயே தான் முதலில் தன்னியல்பாலே உண்டான காரணத்தால் ஸ்ரீ ஆதிகும்பேசர் எனவும், அமுர்தம் நிறைந்த இடத்தில் உண்டானதால் ஸ்ரீ அமுர்தலிங்கேசர் எனவும் இன்னும் பல காரணங்களால் பலவிதமாயும் பெயருண்டாயின.

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் அவுஸ், ஸ்ரீகாசி & சென்னை.

இந்த ஸ்தலத்திற்கு பாஸ்கரக்ஷேத்திரமென்றும் பெயருண்டு. பாஸ்கரக்ஷேத்திரமென்றால் மலையையாவது அல்லது நதியையாவது அடுத்துள்ள ஸ்தலத்தில், பிரம விஷ்ணு, ருத்திராதி மும்மூர்த்திகளும் இருந்து, சூரியனால் அம்மூர்த்திகள் பூஜிக்கப்பட்டால், அது பாஸ்கரக்ஷேத்திரமென்று வழங்குமென புராணங்களில் சொல்லப்படுகிறது.

## இரண்டாவது—அத்தியாயம்.

### கும்பகோணம் இருக்குமிடமும், அதன் எல்லைகளும்.

இந்தஸ்தலம் இருக்குமிடத்தைச் செவ்வையாய்ச் சொல்லுமிடத்து, கீழ்க்கடலாகிய வங்காள விரிகுடாவுக்கு மேல் பக்கத்தில், ஐந்து யோஜனை தூரத்திலும், விபீஷணர்க்கருள எம்பிரான் பள்ளிக்கொள்ளும், காவிரி நதியை மாலையாகக் கொண்ட ஸ்ரீரங்கத்திற்கும், நாகேந்திரவனமென்ற திருவானைக்காவிற்கும், கீழ்பால் நான்கு யோசனை தூரத்திலும், திருஆதவூரடிகட் கருளிய இடமாகிய, திருப்பெருந்துறையென்னும் ஆவுடையார் கோவிலுக்கு வடபால் ஏழு யோசனை தூரத்திலும், மணிமுத்த நதிக்கரையில் விளங்கும் விருத்தாசலத்துக்குத் தென்பால், ஐந்து யோஜனை தூரத்திலுமுள்ளது. இது பூமகளின் மார்பணியாகிய மதாணியின் நடுநாயகமாகி இரத்தினம்போன்றது. இதைச்சூழ்ந்து அநேக ஸ்தலங்களிருக்கின்றன. அவைகளுள் கிழக்கில், திருவாடுதுறை, தென்குரங்காடுதுறை, முதலிய சிவஸ்தலங்களும்; தென் கிழக்கில், குடவாயில், திருநறையூர், சிவபுரம், கலயநல்லூர், முதலிய

சிவஸ்தலங்களும்; தெற்கில், மதங்கர்க்கருளும் தெக்கணவ ஞாஞ்சியும், பட்டீச்சுரம், பழையாறை திருச்சத்திமுற்றம் முதலிய சிவஸ்தலங்களும்; தென்மேற்கில், நல்லூர் திருப்பாலைத் துறை சக்கரப்பள்ளி முதலிய சிவஸ்தலங்களும்; மேற்கில் திருவலஞ்சுழி, வடகுரங்காடுதுறை முதலிய சிவஸ்தலங்களும்; தென்மேற்கில், திருவைகாவூர் விசயமங்கை முதலிய சிவஸ்தலங்களும்; வடக்கில், திருப்பிரம்பியம், கோகறந்தபுத்தூர் முதலிய சிவஸ்தலங்களும்; வடகிழக்கில் திருவாய்ப்பாடி, சேய்ஞலூர் திருப்பனந்தாள், திருமங்கலக்குடி, கஞ்சனூர் முதலிய சிவஸ்தலங்களும்; இக்கும்பகோணத்துக்கு நான்கு புறத்தும், ஒரு யோசனைக்குள் விளங்கி, இந்த ஸ்தலப்பெருமையை நன்கு புலப்படுத்துகின்றன.

இந்த க்ஷேத்திரம் கிருதாயுகத்தில் மூன்று யோஜனையும், திரேதாயுகத்தில் இரண்டு யோஜனையும், துவாபரத்தில் ஒரு யோஜனையும், கலியில் அரை யோஜனையும், விஸ்தீரணத்தை யுடையது என்று புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

---

## மூன்றாவது—அத்தியாயம்

---

### கும்பகோணத்திலுள்ள க்ஷேத்திரங்களின் விவரம்.

(1). இக்கும்பகோணத்திற்கு அரை யோஜனை விஸ்தாரமுள்ள ஸ்தலத்துள் கன்னியா தீர்த்தக்கரையில் வடபக்கத்தில் ஒன்பது கன்னியர்களோடு ஸ்ரீ காசிவிசுவநாதரும்;

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் அவுஸ், ஸ்ரீ காசி & சென்னை.

(2) கீழ்கரையில் மேல் திசையை நோக்கித் தீர்த்தாபிமுகமாய் ஸ்ரீ அபிமுகேசரும் ;

(3) மேல் கரையில் கிழக்கு முகமாய் ஸ்ரீ கவுதமநாதரும் ;

(4) இக் கன்னியா தீர்த்தத்திற்கு வாயு மூலையில், வில்வ வனத்தில் ஸ்ரீ பாதாள இலிங்கேசர் என்ற ஸ்ரீ நாகேசரும் ;

(5) இந்நாகேசருக்கு வாயு மூலையில் ஸ்ரீ சோமேசரும் ;

(6) இவருக்கு வாயுமூலையில், ஹேமரிஷிக்குத் திருமகளாக வந்த திருவைத் திருமணம் புணர்வான் வந்து ஆராவணையிற் பள்ளிகொள்ளு ஸ்ரீ மாராவமுதனும் ;

(7) இவர்க்கு நேர்மேற்கில், குட மூக்கிற்றோன்றிய ஸ்ரீ கும்பலிங்கேசரும் ;

(8) கும்ப இலிங்கேசர் கோயில் மதிலுக்குத் தென்மேற்றிசையில், மாந்தி வனத்தில், தாயமேகுமா முனிவர் வேண்டுகோளுக் கிரங்கி ஸ்ரீ காசியினின்றும் எழுந்தருளிய ஸ்ரீ காசிவிசுவேசரும் ;

(9) கும்ப இலிங்கேசருக்கு வடக்கில், காவேரியின் தென்கரையில் எழுந்தருளிய ஸ்ரீ ஆதிவராகப் பெருமாளும் ;

(10) இவர்க்கு வடமேற்கில் காசியபருக் கருளிய ஸ்ரீ இலக்குமி நாராயணப்பெருமாளும்,

(11) காவேரிக்கு வடபால், மதங்கர்க்கு அருளிய ஸ்ரீ வரதராஜனும் ;

(12) ஸ்ரீ வரதனுக்குத் தென்பால் காவேரிக்குத் தென் கரையில் சூரியனுக்கருளிய சக்கிரபாணியாகிய நரசிம்மனும் ; *

---

* இந்தக் கோவிலுக்குச் சமீபத்தில் பேய்பிடித்தவர்கள் யார் வந்தபோதிலும், அவர்கள் தனிமையாய் ஆடுவதும், குதிக்கிறது முதலியன இப்போதும் நடந்துவருகிறது.

(13) இச் சக்கரபாணி சந்நிதிக்கு நேர் கிழக்கில் ஸ்ரீ பாணபுரீசரும், கோயில்கொண்டு அர்ச்சாவிக்கிரகங்களில் ஸாந்நித்தியமாக விருக்கின்றார்கள்.

இவையன்றி இப்புஸ்தகத்தினுள் கூறப்படாத ஸ்ரீ காளத்திநாதன், ஸ்ரீ இராமன், ஸ்ரீ வரதன், ஸ்ரீ சரநாராயணன், ஸ்ரீ வேதநாராயணன் முதலிய பல தேவாலயங்களும் இவ்விடத்தில் அனேகம் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் நாம் இங்கு எடுத்து எழுதுவதானால் இச்சிறு புஸ்தகம் இடம் பெறாதெனு அதை விடுத்தனம்.

---

## நான்காம்—அத்தியாயம்.

---

### 4. இதைச்சுற்றி ஒரு குரோசத்திலுள்ள பஞ்ச க்ஷேத்திரமும் அவற்றின் வைபவமும்.

#### (1) மத்தியார்ஜுனம்.

கும்பகோணத்திற்கு கிழக்கே இரண்டு குரோச தூரத்தில், விபண்டகர் என்கிற முனி 24 சதுர் யுகங்கள் பக்தி சிரத்தையாய், ஸ்ரீ அர்த்தநாரீசுரரைக் காணவேண்டுமென்னும் ஆசையோடு தபசு செய்துகொண்டிருந்தார். ஈசனும் அவர் தவத்திற் கிறங்கி, ஆனந்தத்தை யுடையவனாய், விருஷபரூடனாய், பிருகத்குசாம்பிகா சமேதனாய்ச், சகல பரிவாரங்களுடனும், அவருக்குப் பிரசன்னனாய், அவர் இஷ்டத்தைப் பூர்த்தி செய்தனன். தைமாசம், பூச நட்சத்திரம், பௌர்ணமி திதி, மத்தியானம் அபஜித இலக்கினத்தில், அவருக்கு

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் அவுஸ், ஸ்ரீகாசி & சென்னை.

பிரத்தியட்சமாய் அவர் இஷ்டத்தைப் பூர்த்தி செய்து, அவ ரால் பூசிக்கப்பட்டு, அவ்விடத்திலேயே மகாலிங்கம் எனப் பெயர் பெற்று உகந்திருந்தனர். இந்த இடத்திலேயே காச் சியப இருஷியானவர், 12 வருஷம் ஸ்ரீ பாலகிருஷ்ணனைக் காணவேண்டித் தவம்புரிந்து, அவரைப் பிரார்த்திக்க, உமா பதி, அவர் தவத்திற்கிறங்கி, மனம்பூரித்து, அர்ச்சுனம் என்று பெயருடைய மருத மரத்தினடியில் அவருக்கு பிரசன்ன மானார். பிரசன்னமான ஹரியைக் கண்ட காச்சியபர், ஆநந் தத்தினால் பரவசமடைந்து, பயித்தியம் கொண்டவனைப் போலத் துதித்துப் புகழ்ந்து கூத்தாடித் தோத்தரித்து, அங் கேயே எழுந்தருளி, உலகத்தாருக்கு அநுக்கிரகம் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க, அவ்வண்ணமே ஹரிஹரன் என்னும் இருவரும், உலகத்திற்கு உய்வுண்டாகும் வண் ணம் ஓர் மருதன் இடை தோன்றினர். ஆனபடியால் அவ் வூருக்குத் திருவிடைமருதூர் என்றும், மத்தியார்ச்சுனம் என் றும் பெயருண்டாயிற்று. தைமாதம், பௌர்ணமி, அபிசக லக்கினத்தில் இந்த ஸ்தலத்திலுள்ள காவேரியில் கலியாண தீர்த்தத்தில், ஸ்நாநம் செய்பவர்கள் பிரமஹத்தியாதி பாதங்க ளும் நீங்கி முத்தியடைவார்கள் என்று விசேஷமாய் சொல் லப்படுகிறது.

மேஷத்தில் சூரியன் பிரவேசிக்குங் காலத்திலே (சித் திரைமாதப் பிறப்பிலே) மகாலிங்கத்தின் சந்நிதியிலுள்ள காருண்யாமிருத தீர்த்தத்திலும், ஈசாந்நிய திக்கிலுள்ள காருண்ணியாமிருத தீர்த்தத்திலும், உரோமசனுக்கு ஞானம் கொடுத்ததும், கருநிறகாக்கையுடலம், பொன்னிறமாக்கியதும் வாயு திக்கிலுள்ளதுமாகிய தீர்த்தத்தில், வைகாசி மாதத்திலும், ஸ்நானம் செய்பவர்கள் எவ்வித பாதகத்தினின்றும், முக்தர்க

ளாகி, நற்கதியடைவார்கள் என்பதற்குச் சந்தேகமேயில்லை. இந்த ஸ்தலம் கும்பகோணத்தைச் சேர்ந்த பஞ்சக் குரோச க்ஷேத்திரங்களிலொன்று. இந்த ஸ்தலத்தில், மூன்று தீர்த்தங்களிருக்கின்றன. அம்மூன்றிலும் மூழ்கினோர் பெரும்பலனடைவார்கள்.

## (2) திருநாகேசுவரம்.

கும்பகோணத்திற்கு அக்கினி மூலையில் ஒரு குரோசத்தில் ஸ்ரீ திருநாகேசுரம் என்றோர் ஸ்தலமுள்ளது. அதில் ஆதிசேஷன் நூறு வருடம் தவம் செய்து, நினைத்த பலனெல்லாமடைந்து, பிறகு பதினாயிரம் வருஷம் தவம்புரிந்து, நாகவாவியென ஓர் தடாகமியற்றி, அத்தடாகக் கரையில் எழுந்தருளியிருந்த சாக்ஷாத் பரமசிவனுக்கு, நாகநாதனென பெயர்வைத்து, அவ்வூரின் தடாகத்தில் மூழ்கி ஸ்ரீ நாகநாதனை தரிசித்தவர்க்கு, சகலபாபமும் போகவேண்டுமென்றும், சிவ சாயுச்சிய பதம் தரவேண்டுமென்றும் பிரார்த்தித்து, அவ்வாறே வரம்பெற்றனன். ஸ்ரீ நாகேசனாகிய ஆதிசேடனால் பூசித்த ஸ்தலமாதலால், இந்த ஸ்தலத்திற்கு ஸ்ரீ நாகேசுரமெனப் பெயர் வாய்ந்தது. இந்த ஸ்தலத்தில் கார்த்திகை சோமவாரம் ஆதித்தியன் பூசித்து மூழ்கி பெரும் பேறு பெற்றான். ஆதலால், அத்தீர்த்தத்திற்கு, ஸ்ரீ ஆதித்திய தீர்த்தமென பெயருமுள்ளது. இத்தீர்த்தத்தில், கார்த்திகை ஆதித்திய வாரம் மூழ்கி, ஸ்ரீ நாகேசனை பூசிக்கவேண்டும். தரும தேவதை, அந்நீராடி பேர்பெற்றதால் தரும தீர்த்தமென்றும் பெயர் ஒன்றுண்டு.

வாசுகி, கார்த்திகை சோமவாரம் வந்து மூழ்கி, முதல் யாமத்தில் ஸ்ரீ நாகேசனையும், இரண்டாம் யாமத்து ஸ்ரீ சமீவு நேசனையும், மூன்றாம் யாமத்து புன்னாகவனேசனையும்

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் அவுஸ், ஸ்ரீகாசி & சென்னை.

பூசித்து, நாலாம் யாமத்தில் பாதலம்புகுந்து, இம்மூவரையும் நினைத்துத் துதித்து முக்திபெற்றான். ஆனையால், இந்த ஸ்தலத்திற்கு ஸ்ரீ நாகேசுரமென பெயருண்டாயிற்று என்றும் புராணங்களினால் தெரியவருகிறது.

திருநாகேசுரம் என்னும் ஸ்தலத்திற்கு தென்புறத்தில், அதிக சமீபத்தில் ஆகாச நகரமென்று பெயரையுடைய மூன்று உலகங்களிலும் பிரசித்தி பெற்ற துளஸீ வனத்தில், மார்க்கண்டேய மகரிஷியானவர், தனக்கு ஒரு பெண்மகள் வேண்டி, மகா விஷ்ணுவின் மார்பைத் தனக்கு இடமாகக் கொண்ட கமலலோசனையாகிய, இலக்குமியைக் குறித்து துதித்து, ஆயிர வருஷம் நியமவிருத்தத்தோடு உவர்ப்பு முதலிய ருசிகளையும், இவை முதலிய பதார்த்தங்களையும் தள்ளி உண்டு, பகவத் தரிசனமே முக்கியமாகக் கொண்டு தவம் செய்தனர். அவருடைய தவத்துக்கு இரங்கி, உலகமாதாவாகிய விஷ்ணுபத்தினியும், ஓர் இளங்குழந்தையாய், அத்துளசி வனத்தின் ஒரு துளசிச் செடியினடியில் எழுந்தருள, அக்குழந்தையைக் கண்ட மார்க்கண்டேயர், ஆனந்தபரவசராய், தரித்திரன் கண்ட நிதிக்கு வியலைப்போலக் கண்டு, எடுத்துவந்து வளர்த்து வருநாளில், அப்பெண்ணின் ரூபலாவண்ணியத்தைக் கண்டு, இப்பெண்ணுக்குத் தகுதியான புருஷன் எங்குளனோ? பிரமாதி தேவர்களும், இவள் கட்டழகுக்கு ஒப்பாகார்கள், ஆதலால், இவளுக்குப் பதி வைகுண்டபதியே யென்பதற்குச் சந்தேகமேயில்லை என நிச்சயித்துக்கொண்டிருக்கும் நாளில், ஒருநாள் விஷ்ணுவே, கிழப்பிராமண வேஷம் பூண்டு, தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டு, மார்க்கண்டேயரிடம் வந்தார். அவரைக் கண்டவுடன் மார்க்கண்டேயரும் எழுந்து எதிர்சென்று, அர்க்கிய

பாக்கியமளித்து ஐயாவே! நானோ (அப்பொருளுடையா னயனவனை) சிறு பெண், வீட்டில் என்னை வேண்டி வந்திருப்பவரோ கிழவராயும், கோபத்தால் சிவந்த கண்களை யுடையவராயும் இருக்கிறார். வீட்டுக்காரியங்களில் ஏதாவது கொஞ்சம் தவறினால், உடனே என்னை வைது அடிப்பார் போல் தோன்றுகிறது. அதினால் நான் கோபித்துக்கொண்டு ஆறு, குளம், கிணறு முதலியவைகளில் எங்கேயாவது விழுந்து இறந்து விடுவேன். நான் இறந்ததைக் கேள்வியுற்று, நீரும பிராணனை விடும்படி நேரிடும். தன் பெண்ணை ஓரிடத்தில் விவாகம் செய்து கொடுப்பதாயிருந்தால், செவ்வையாக விசாரித்துக் கொடுக்கவேண்டுமாகையால், நீர் அந்தப் பிராமணனை "உமக்கு உறவினர் எங்கேயிருக்கிறார்கள்? உம் வீடு எங்கே? என்று கேட்டதுடன், என் பெண் சிறுமி, வீட்டுக்காரியங்களொன்றும் தெரியாதவளென்று சொல்லி, அதற்கவர் என்ன மறுமொழி கொடுக்கின்றாரோ, அப்படியே செய்யுங்க" ளென்று கூறினள். இதை மறைவிலிருந்து கேட்ட கிழவனாகி யாசகத்திற்கு வந்த கமலக்கண்ணன், அம்மார்க்கண்டேயரை நோக்கி, ஏ முனீந்திரா! எனக்கு உற்றார் இல்லை! பெற்றார் இல்லை!! ஊர் இல்லை! வீடு இல்லை!! எல்லாம் நீயே, எனக்கு காசு பணம் கிடையாது, சம்சார வாழ்க்கையில்மட்டும் விருப்பம இருக்கிறது. எல்லாங் கருடாரூடன் கருணையால் சீக்கிரம கைகூடும் என்றனன். இதைக்கேட்ட மார்க்கண்டேயன் சம்மதித்து வீட்டுக்கு வந்து அங்கு நடந்ததையெல்லாம், தன் பெண்ணுக்குச் சொல்ல, அந்தப்பெண், "ஐய! நீரென் செய்வீர்! எனது பாக்கியப்படி எல்லாம் நடக்கும, நான் ஜெகந்நாதனாகிய ஸ்ரீமந்நாராயணனையே குறித்திருந்தேன், நீர் விதிப்படி காரியத்தைச் செய்யுமெனவும, மார்க்கண்டேயர் மகா விஷ்ணுவைத் தியானித்தார். உடனே கிழவராயிருந்த பகவான் தன்னுருவைக்காட்டி அவர் செய்யும் கன்னிகாதானத்தை தீர்த்தத்துடனேற்று, 'ஏ மார்க்கண்டேயா!! உமது இஷ்டப்

---

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் பஜார், ஸ்ரீகாசி சென்னை.

படியே நான் இங்கேயே இருக்கின்றேன். உமது பெண் இளங்கையாய் இருப்பதால், வீட்டுக்காரியங்கள் தெரியா திருக்கு மென்றீரோ' அப்பெண் எப்படிச் செய்தாலும் நான் பொருத்திருப்பேன் என்றார். மார்க்கண்டேயர் ஆனந் தக்கடலில் ஆழ்ந்து, ஆநந்த புஷ்பம் கண்ணினின்றும், தாரை தாரையாய்ச் சொரிய, உடம்பு புளகிக்க வாயார வாழ்த்தித் தோத்தரித்து என் *ஆண்டவனே! என் மகள் எனக்கு உப்பில்லாப்பண்டங்கள் விருந்தத்திற்காகச் சேக ரித்தவலாதலால், அவளுக்கு அதுதான் தெரியும. நீர் அதை உகந்து உண்டு * உப்பிலியப்பனென இத்தலத்திலேயே எழுந்தருளி இருக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க அவ்வாறே வீற்றிருக்கின்றார்.

(3) ருத்ராட்சவனம்

கும்பகோணத்திற்குத் தென்மேற்கு மூலையில் அரைக் குரோசத்தில், ருத்ராட்சவனம ஒன்றுளது. அது சாக்ஷா த்பரமசிவனால் ஸ்தாபிக்கப்பட்டது. முப்பத்து முக்கோடி தேவதைகளும், இலைகளாகவும், இருடிகளும், கந்தருவர்க ளும, பெருங் கிளைகளாகவும, கின்னரர்கள், சிறு கிளைகளா கவும, விசுவேதேவர்களும், சாத்தியர்களும, வசுக்கள், மண் மரும, மருத்துக்களும, அவ்விருக்ஷத்திலுள்ள பக்ஷிகளாக வும், அணிவோர் பிரமனுகவும், பன்னிரண்டு சூரியர்களும் சுற்றுவேர்களாகவும், தேவஸ்திரீகள் மரத்தின் பட்டையாக வும், வந்து சேர்ந்து, எப்பொழுதும் வசித்துக்கொண்டிருக் கிறார்கள். உலகத்திற்கு மங்களத்தை உண்டாக்குகிற ஸ்ரீ சங்கரன், அந்த மரத்தடியில் வசித்துக்கொண்டிருக்கிறார். முனிவர்களால்இடப்பட்ட சாபத்தால்மிகுந்ததாபமுற்ற இய மன், அந்தஸ்தலத்தையடைந்து, சிவனது சூலத்தால் செய் யப்பட்ட தீர்த்தத்தைப்புதுப்பித்து, அதற்குத் தன்பெய ரிட்டு, இயம தீர்த்தம் என்று பெயர் வழங்கும்படி செய்து,

* இவ்வூருக்குத் திருவிண்ணகரமெனவும உப்பிலியப்பன் கோயிலெனவும் பெயர் வழங்குகின்றது.

தேவர்களை வருவித்து ஆவணி மாதம் அசுவதி நட்சத்திரத்தில், உத்ஸவாரம்பம் செய்வித்து, ஒன்பதுநாள் உத்ஸவம் நடத்தி, கடைசிநாளாகிய அமாதிதி மகா நட்சத்திரத்தில், இயமதீர்த்தத்தில் தீர்த்த மளித்து, அத்தீர்த்தத்தில் பதினாயிரம் வருஷம் தவமியற்றித் தன்சாபம் தவிர்ந்து, அநேக வரங்களைப்பெற்று விசுவகருமாவினால் பட்டணம் நிருமாணம் செய்வித்து முக்தி பெற்றான்.

சூரசேனனென்ற வொருவன், ஓர் பிராமணனைக்கொன்ற தோஷத்தினால் பீடிக்கப்பட்டு எல்லா விடங்களிலும் சென்றும், நீங்காத பிரமஹத்தி, இந்த ஸ்தலத்தில் தங்கி ஸ்நானம், தரிசனம் முதலியவைகளைச்செய்து, ஏராளமான அன்னதானஞ் செய்ததால் பிரமஹத்தி நீங்கி முக்தியடைந்தான்.

எக்கியனென்னும், ஒரு சாதுப் பிராமணன், முன் ஜன்மத்திய தீவினையால், முயலக நோயை (அபஸ்மாரவியாதி, சித்தப்பிரமை) அடைந்து, இந்த ஸ்தலத்தில் செய்த அன்னதானத்தால் அந்நோய் தவிர்ந்து சவுக்கியமடைந்தான்.

சுபுண்ணியன் என்னும் ஓர் பிராமணன் தனது குருபத்தினியின் கற்பைக்கெடுத்த பெரும் பாதகத்தை, இந்த ஸ்தலத்தில் அன்னதானஞ்செய்ததினால், இந்நோய் தீர்ந்து முக்தி யடைந்தான்.

ஆண்யளப்பவனாகிய சூரியன் சாத்திரங்களால் விலக்கப்பட்ட கள்ளை யருந்தியதாலுண்டான பாதகத்தை, இந்தஸ்தலத்தில் தான் செய்த அன்னதானத்தால் நீங்கி முக்தியடைந்தான்.

இந்திரனது ஐராவதம், துர்வாச இருஷி சாபத்தால் இழந்த தனது வெண்மை நிறத்தை, இந்த ஸ்தலத்தில் இந்த இயம தீர்த்தத்தில் மூழ்கிச் சாபம் நீங்கியதால், மறுபடியும் வெண்ணிறம் பெற்றதாகவும், புராணங்களில் சொல்லப்படிருக்கிறது.

---

இவ்வாறு ஐராவதம் பூசித்தலால் ஐராவத நகரமென்று பெயர் பெற்றதன்றியும், அவ்விலிங்கத்திற்கும் ஸ்ரீஐராவதேசுவரனென்றும் பெயருண்டாயிற்று.

தாரனென்னும், ஓர் அசுரன் தேவர்களை ஜயித்து, தனக்கு சாவு இல்லாமலிருக்கவேண்டுமென்று விரும்பி, ஸ்ரீ ஐராவதேசுவரனைப் பூசித்து வரம் பெற்றனன். அவனுடைய நூறு மனைவிகளும், அவரைப்பூசித்து நினைத்த வரங்களைப் பெற்று சிவலோகம் அடைந்தார்கள். இந்த ஸ்தலத்தில் தாரன் பூசித்தலால் இந்தஸ்தலத்திற்கு ஸ்ரீ தாரேசுவரம் எனப்பெயருண்டாயிற்று.

அவன் மகன் மேகதாரனென்பவன், வைகாசி மாதத்தில், ஐராவதேசுவரனுக்கு உற்சவம் செய்து, அவனடி பணிந்து, இன்னும் இந்த ஸ்தலத்தை விட்டு நீங்காமலே இருக்கின்றான். இந்த ஸ்தலத்தில் அன்னதானஞ்செய்து பெரும் பாதகங்கள் தொலைந்திருப்பதை அறிந்து, பிற்காலத்து அரசாண்ட அரசர்களும், இவ்விடத்தில் அன்னசத்திரங்கள் ஏற்படுத்தி, இன்றும இவ்வன்னதானம் குறைவற நடத்தப்பட்டுக் கொண்டு வருகிறது.

## (4) சுவாமிமலை

கும்பகோணத்தின் வாயு மூலையில், ஒரு குரோச தூரத்தில் சுவாமிமலை யென்று ஓர் ஸ்தலமுளது. அம்மலையின் படிகள் பிரபவாதி வருஷ தேவதைகளாம் அம்மலையின் காற் புறமும், இருது தேவதைகள் இருக்கின்றார்கள். அம்மலை யேறுவோர் சுவாமியைத் தியானித்து, வருஷ தேவர்களைத் துதித்துப் படிக்குப்படி தேங்காயுடைத்து, மலை மீதுள்ள சுவாமியை வணங்கி, பின்பு மலையின் அடிவாரத்திலுள்ள இலிங்கத்தைப் பூசிப்பதால், நினைத்த பயன்களை அடைவார்கள். கார்த்திகை மாதம், அவரவர்கள் பௌர்ணமியில் அபிஷேகஞ் செய்வித்துப் பூசித்து வணங்குகிறவர்களும், சித்திரை மாதம் கிருஷ்ணபக்ஷம், சதுர்த்தசியில் அங்கப்பிரதட்சணம் செய்பவர்களும், வைகாசி மாதம்

பௌர்ணமியிலும், தை மாதம் பூசத்திலும் குமார தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, குமரனைப் பூசித்தவர்கள் நினைத்த பயனை யெல்லாம் அடைவார்கள். கேகய நாட்டரசன் சிவத்துரோகஞ் செய்ததால், தீராத வாதநோயடைந்தவர்கள் ஞானியின் வார்த்தையால், தைப் பூசத்தில் நீராடிக் குமரனுக்குப் பால் திருமஞ்சனஞ் செய்வித்து, அவரைப் பூசித்து வணங்கியதால், அந்நோய் நீங்கி இந்தஸ்தலத்தை திருப்பணி முதலியவைகளால் சிறப்பித்துச் சுவாமிக்கும், மிகுந்த ஆபரணங்கள் செய்வித்தான். அப்புண்ணியத்தால் அவன் கார்த்தவீரியன் என்னும் புத்திரனையடைந்தனன். இங்கு எப்படிப்பட்டவர்களும் அங்கப்பிரதக்ஷணம் செய்வது வழக்கம். இந்த ஸ்தலத்தில் இதுதான் விசேஷமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது.

5 பாடலவனம்.

கும்பகோணத்தின் ஈசான்னிய பாகத்தில் பாடலவனம் என்னும் ஓர் ஸ்தலமுண்டு. இந்தஸ்தலத்தில் சிவன் அழகிய உருவத்துடன் பொலிவுற்றிருப்பதால், தேவர்களெல்லாரும், அவரை ஸ்ரீ சுந்தரேசனெனத் துதிக்க வீற்றிருக்கின்றனர். இந்தஸ்தலத்தில் அகஸ்திய முனிவர் சொற்படி, சுவர்ணரோமனென்பவன் சாக்ஷாத்பரமசிவனை அருச்சித்து பெருமையடைந்தான். சித்திரை மாதம், பௌர்ணமியில் வாலகில்லியர் பூசித்து சாயுஜ்யமடைந்தனர். சூரசேனன் என்ற ஓர் அரசனும், குபேரனும் பூசித்துப் பெருமை யடைந்து குபேரன் சிவனுக்குத் தோழனானான். வங்காநாடாளும் சோமகேது என்பவன், அகஸ்திய முனிவர் சொற்படி, பரமனை அருச்சித்து, ஸ்வர்ணரோமனென்னும் மைந்தனை பெற்றான். இந்தஸ்தலத்தில் பிரமதீர்த்தமென்று ஒரு புண்ணியதீர்த்த மிருக்கின்றது. அப்பிரமதீர்த்தத்திற்குத் தென்பால் புன்னாகவனம் என ஓர் வனம் இருக்கிறது. அப்புன்னாக வனத்தில், ஸ்ரீ பூமி நீலாஸமேதராய் காலவ இருஷிக்கு வரமளித்த ஸ்ரீ வெங்கிடேசப்பெரு

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் அவுஸ், ஸ்ரீகாசி சென்னை.

மான் எழுந்தருளியிருக்கின்றனர். இவரை ஒருக்கால் தரிசனம் செய்பவர்கள், இந்தப் பஞ்சக் குரோச க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்வதாலுண்டாகும் பலன்கள்யாவும் ஒருங்கேயடைவார்கள். கும்பகோணம் யாத்திரையை விரும்பி, இவ்விடம் வருபவர்கள், இந்தப் பஞ்சக்குரோச க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்வதே முக்கியமாகும். சிவன் விஷ்ணு முதலியோர்களுக்கு அத்தியந்தம் பிரிய ஸ்தானங்களாகிய, இந்த க்ஷேத்திர யாத்திரையால், இஷ்டமான பலன்களெல்லாம் அடையலாம். இவற்றை ஒரு தரம் தரிசிப்பதாலும், நினைப்பதாலும், உச்சரிப்பதாலும், இவற்றில் வாசம் செய்வதாலும், மறு ஜன்மம் இல்லாதவராய் முக்தியடைகிறார்கள்.

இவ்வைந்து க்ஷேத்திரங்களும், கும்பகோண க்ஷேத்திரத்திற்கு அங்கக்ஷேத்திரம் எனப்படும். இவற்றைத் தவிர பதின்மூன்று க்ஷேத்திரங்கள் பிரத்தியங்க க்ஷேத்திரங்களாய் இவ்விடம் விளங்கப்பெற்று வருகிறது.

ஆனால், இக்கும்பகோண யாத்திரைசெய்யப்பட்டவர்கள் ஒவ்வொருவரும், முதலில் அங்கக்ஷேத்திரங்களாகிய மேல்காட்டிய ஐந்தைமட்டும், வலமாகச் சுற்றிலும், ஒருதரம் யாத்திரைசெய்து, பிறகு பதினெண் ஸ்தலங்களையும், இரண்டாந்தரமாக யாத்திரை செய்துகொண்டு வரவேண்டுமென்று ஸ்தல புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

அதன் பின்பு, கும்பகோணம் ஸ்தலத்துக்குள் சென்று, மகாமகவிரதத்தை விதிப்படிசெய்து, மகாமக தீர்த்தத்தில் நீராடி ஸ்நானங்களைச்செய்து, பிறகு, அந்த ஸ்தலத்திலுள்ள சைவ, வைஷ்ணவ ஆலயங்களுக்குச் சென்று, மூர்த்திகளைப் பூசைசெய்விக்கவேண்டும். அவற்றுள், மகாமக ஸ்நானவிரதத்தைச் சொல்வதற்குமுன், நீராடும் தீர்த்தங்கள் இவை

யெனவும், அவற்றின் பெருமைகள் இவையெனவும், நீராடும் விதமும், நீராடுவதாலுண்டாகும் பலன்களும் விஸ்தாரமாய் கூறப்பட்டிருக்கிறது.

15024

## ஐந்தாம் அத்தியாயம்.

### கும்பகோணத்தில் முக்கியமாய் ஸ்நானம் செய்யவேண்டிய தீர்த்தங்களின் பெயர்கள்.

இவ்வுலகத்தில் புண்ணிய தீர்த்தங்களாய் விளங்குகின்றவை கணக்கில்லாதனவாய் இருப்பினும், அவற்றுள் முக்கியமானவை, கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நருமதை, சிந்து, காவேரி, வேகவதி, சரயு யென்னும் ஒன்பது நதிகளேயென, அநேக இதிகாச புராணாதிகளில் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுள், மூன்று உலகினும் செல்கின்ற காரணத்தால், திரிபதகையென்றும், பகீரதன் தவத்தால் வந்ததால் பாகீரதியென்றும், சந்ஹு மகாரிஷியின் யாகத்தை பழிக்க அவர் உண்டு, பகீரதன வேண்டுகோளுக்கிரங்கி, பிறகு காதால் விடுத்தலால் பாகீரதியென்றும், பெயரையுடையதாகிக் காசியிலோடுகின்ற கங்கையினும் மிகுந்த காவேரி, சையமலை தொடங்கி, சமுத்திரம் வரையில் ஓடுகின்றதாயினும், இதில் மூன்றிடங்கள் விசேஷமானவை. அவையாவன, திருவரங்கம், (இதுதான் ஸ்ரீரங்கம்) கும்பகோணம் காவேரி சங்கமாகும் இடம் என்றும், இம்மூன்றிலும், சங்கமுகத்திலும், திருவரங்கமும், அதிலும் குடந்தையும் விசேஷமானதென்றும், காவேரி நீரிற்றோய்ந்து படிந்த காற்று, எந்த தேசத்தில் செல்லுகின்றதோ, அத்தேசத்துள்ளவர்கள் யாவரும் முத்தியடைகிறார்கள்; ஆகையால், அக்காவேரி தீரத்திலேயே வசிப்பவர்களுக்கு என்ன பாதகந்தானுண்டாகும், ஒரு பாதகமும் உண்டாகவேமாட்டாது என்றும், இன்னும் பலவாறாகவும்,

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் அவுஸ், ஸ்ரீகாசி சென்னை.

பிரமாண்டம், பிரமகைவர்த்தம், ஆக்கிநேயம், சேஷதருமம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

சாதாரணமாய், எல்லா இடங்களிலிருந்தும் செய்யும் பாபங்கள், புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு வந்தால், தீர்ந்துவிடும். புண்ணிய க்ஷேத்திரங்களிலிருந்து செய்யும் பாபங்கள் காசியில் தீரும். காசியிலிருந்து செய்யும் பாபங்கள் கும்பகோணத்தில் தீர்ந்துவிடுமென்றும், கும்பகோணத்திலிருந்து செய்யும் பாபங்கள் கும்பகோணத்திலேயே தீருமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவைகளுக்கெல்லாம் காரணம் இக்காவேரி நதியின் மகத்துவமேயன்றி வேறில்லை.

இக்காவேரி நதி தவிர இவ்விடத்தில் வேறு பல தீர்த்தங்கள் இருக்கின்றன. அவைகள் ஒன்றைவிட ஒன்று, அதிக மேன்மையுடையதாகவே இருக்கின்றன. அவைகளைப் பற்றிப் புராணங்களில் விவரமாகவும், அதிக தெளிவாகவும் கூறப்பட்டிருந்தாலும், இவ்விடத்தில் நாம் அவ்வளவு எடுத்துச் சொல்ல இடம் போராதாகையால், அதில் சிறிதளவு எடுத்துச் சொல்லுகிறோம்.

முதலில் சாக்ஷாத் சிவபெருமானது திருவுளப்படி அமுர்தம் தங்குவதற்கு பூமி இடங் கொடுத்ததாலாகிய அமுர்த வாவிகள் இரண்டுள.* இவையன்றி, காவேரி நதியும் ஒன்றிருக்கின்றதென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவையல்லாத மற்ற தீர்த்தங்களைப் பற்றிச் சிறிது சொல்லப்படுகிறது.

முற்காலத்தில், தீர்த்த தேவதைகளாகிய ஒன்பதின்மரும், ஈசனிடம் சென்று, " பரமேச! உலகத்திலுள்ளவர்கள் யாவரும் மகா பாதகங்களையெல்லாம் போக்குவதற்காக, எங்களிடம் வந்து, நீராடித் தங்கள் பாபங்களையெல்லாம்,

* அவ்விரண்டுகளின் பெயர்கள், ஒன்று பொற்றாமரையும், மற்றொன்று மகாமகக் குளமுமாம்.

எங்களிடத்தில் விட்டுவிட்டுத் தாங்கள் பரிசுத்தர்களாகிப் போய்விடுகிறார்களே, நாங்கள் எங்கள் பாபங்களை, எப்படித் தீர்த்துக்கொள்ளுகிறது" என்று பிரார்த்திக்க, பரம கிருபா நிதியாகிய சந்திரசூடன், "தீர்த்த தேவதைகளே! நீங்கள் தடாகத்தில் கும்பகோணமென்ற ஸ்தலமும், அமிர்தவாவி என்கிற இரண்டு தடாகங்களும் உள்ளன. அவற்றிற்சென்று, மகாமகதினத்தில் நீராடுவீர்களாகில் உங்கள் பாதகங்களெல்லாம் போய் நீங்களும் பரிசுத்தராவீர்கள்" என்று சொல்ல, அக்கன்னிகைகள், பார்வதீசா! நாங்கள் அந்த ஸ்தலங்கள், தீர்த்தங்கள் முதலியன இருக்கும் இடத்தை அறியோம்" என்றுசொல்ல, அதற்கு, காசிநாதச் சிவபிரான், பெண்காள்! நான் காசி விசுவநாதராக அங்கு எழுந்தருளுவேன், நீங்கள் கன்னியாகளாகி, மகாமக தீர்த்தக்கரையில் எப்பொழுதும் இருக்கவேண்டியபடியால், இப்பொழுது வாரணாசி எனனும் காசிக்குச் செல்லுங்கள் என்றுசொல்லி, அவர்கள் காசிக்கு வந்தவுடன், தனது பரிவாரங்களுடனும், அவர்களை ஒரு நிமிஷத்தில் கும்பகோணத்தில் இருக்கும்படி செய்தார். கும்பகோணத்தையும், அத்தீர்த்தத்தையும் கண்ட தீர்த்த கன்னிகைகள், மிக்க ஆனந்தமுடையவர்களாய்க் கூட வந்த காசி விசுவநாதருடன், அபிமுகநாதர், கௌதமேசர் முதலியவர்களையும், தீர்த்தத்தையும், பிரதட்சண நமஸ்காரங்கள் செய்து வணங்கி, அத்தீர்த்தத்தில் நீராடித் தாங்கள் எல்லோரும் ; எப்பொழுதும் அத்தீர்த்தத்தில் ஜல ரூபிகளாய்க் கலந்திருப்பதுடன், அத்தீர்த்தத்திற்கு வாயு மூலையில் சற்றுக் கிழக்கே, மேற்கு முகமாக, ஸ்ரீ காசி விஸ்வநாதர் வீற்றிருக்குந் தீர்த்தத்திற்கு எதிர் முகமாக கன்னிகைகள் வீற்றிருக்கின்ற பெருமையானது செப்பத்தரமன்று.

இதன்றி, இவ்வொன்பது தீர்த்த தேவதைகளும். தங்கள் தங்கள் பெயரால், ஒவ்வொரு தீர்த்தம் உண்டாக்கி, அவற்றில் நீராடுவோர்களுக்குக் கணக்கில்லாப் புண்ணியத்

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் அவுஸ், ஸ்ரீகாசி சென்னை.

தையும் கொடுக்கின்றார்கள். இந்திராதி திக்கு பாலகர்களும், தங்கள் திசையில், தங்கள் தங்கள் பெயரால் ஒவ்வொரு தீர்த்தமும், பிரமன் வடக்கு திக்கில் தன் பெயரால் ஒரு தீர்த்தமும் உண்டாக்கி, பிரமஹத்தி முதலிய மகா பாதகங்களையெல்லாம் போக்குகிறார்கள். அத்தீர்த்தங்கள் இருக்கும் முறை, முதலியன அடியில் கூறப்படுகிறது.

மத்தியில் கன்னியா தீர்த்தமும், இதற்குக் கிழக்கில், இந்திர தீர்த்தமும், தென் கிழக்கில், அக்கினி தீர்த்தமும், தெற்கில், இயம தீர்த்தமும், தென்மேற்கில், நிருதி தீர்த்தமும், மேற்கில் வருண தீர்த்தமும், வடமேற்கில் வாயு தீர்த்தமும், இதற்குக் கிழக்கில் பிரம தீர்த்தமும், அதற்குக் கிழக்கில் குபேர தீர்த்தமும், வடகிழக்கில் ஈசானிய தீர்த்தமும் இருக்கின்றன. இவையன்றி, இந்திர தீர்த்தத்திற்கும், அக்கினி தீர்த்தத்திற்கும் இடையில் கோதாவரியும், அக்கினிக்கும், இயமனுக்கும் இடையில் காவேரியும், இயமனுக்கும், நிருதிக்கும் இடையில் கன்னியாகுமரியும், நிருதிக்கும், வருணனுக்கும் இடையில் வேகவதியும், வருணனுக்கும், வாயுவுக்கும் இடையில் சரயுவும், வாயுவுக்கும், பிரம தீர்த்தத்துக்கும இடையில் கங்கையும், பிரம தீர்த்தத்திற்கும், குபேர தீர்த்தத்திற்கும் இடையில் யமுனையும், குபேர தீர்த்தத்திற்கும், ஈசானிய தீர்த்தத்திற்கும் இடையில் நருபணையும், தீர்த்த ரூபிகளாய் நின்று, இவற்றில் ஸ்நானம் செய்யப்பட்டவர்கள் எண்ணியபடியெல்லாம் வரமளித்துக் கொண்டு எப்பொழுதும் சுகமாய் வாழ்ந்துக்கொண்டு வருவார்கள்.

இத்தீர்த்தம் ஒவ்வொன்றிலும், ஸ்நானம் செய்யப்பட்டவர்களுக்கு உண்டாகும் பலன்களை எல்லாம் ஒருங்கு தரக்கூடிய, மகாமக தீர்த்தமென்பது புருடர்களுக்கும், விசேஷமாகப் பெண்டீர்களுக்கும், நினைத்த பலன்களை எல்லாம் கொடுக்கத்தக்கது. பெண்டீர்கள், தாங்கள் காகவந்தியாக

வேணும்* கதளீவந்தியாகவேனும், மிருதவந்தியாகவாயினும் இருந்து, மக்கட்பேற்றை விரும்பி, தங்கள் மலட்டுக்குணம் நீங்க எண்ணுவார்களாகில், அப்படிப்பட்ட ஸ்திரீகள் பக்திச் சிரத்தை யுடையவர்களாய் சில கன்னிகைகளுடன் கன்னியா தீர்த்தம் சென்று, அத்தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து ஒன்பது கன்னிகைகளுக்கு ஸ்நானம் செய்வித்து, சந்தனம், மஞ்சள், குங்குமம் முதலியவைகளால் அக்கன்னிகைகளைப் பூஜித்து, பாயஸங்கொடுத்து, நல்ல உண்டியளித்து, தனித்தனியே அந்த ஒன்பது பேருக்கும், தக்ஷணையுடன் தாம்பூலங்கொடுத்து, மூன்றுதரம் அவர்களை வலம் வந்து, தனித்தனி ஒன்பதுதரம் நமஸ்காரம் செய்யவேண்டும். பிறகு, அவர்களிடம் விடை பெற்றுக் கன்னியா தீர்த்தமடைந்து, ஒன்பது சுமங்கலிகளுக்கு, எண்ணெயிட்டு, முழுக்காட்டி, மஞ்சள், குங்குமம், சந்தனம், புஷ்பம் முதலியவைகள் கொடுத்து, உபசரித்து தட்சணை கொடுத்து, அவர்களுக்கு மனத்திருப்தி யுண்டாகும்படி ஏதேனும் பழங்கள் அளித்து, தாமும் எண்ணெயிட்டு முழுகிப், பாயஸம் மாத்திரம் உண்டு, அந்த ஒன்பது கன்னியர்கள் இருக்கும் ஆலயத்திற்குச் சென்று, நூறு மகா தீபம் வைத்து, தனித்தனி ஒன்பது கன்னிகைகளுக்கும், ஒன்பது ஒன்பது தேங்காய் உடைத்துச் சமர்ப்பித்து, அக்கன்னியர்களுக்கு தங்களால் இயன்றமட்டும் உற்சவம் செய்யவேண்டியது. பிறகு, தங்கள் தங்களுடைய சொந்த வீட்டிற்கு வந்து, தரையில் படுத்து உறங்கவேண்டியது. இவ்வாறு நான்கு வெள்ளிக்

---

* வந்தி=மலடி; காகவந்தி=காகம் குயிலினது முட்டையையும், குஞ்சையும், தன் குஞ்சுபோல வளர்ப்பதுபோலத் தான் மக்களைப் பெறாளாகிக் குழந்தையாசையால், பிறர் குழந்தையை வளர்ப்பவள்; கதளிவந்தி=வாழை ஒரே தார் போடுவதுபோல, ஒரே குழந்தையைப் பெறுபவள்; மிருதவந்தி=எத்தனை பெற்றாலும், ஒரு குழந்தையேனும், உயிரோடிராமல் இறந்துபோகும் குழந்தைகளையுடையாள் என்று அர்த்தம்.

---

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் அவுஸ், ஸ்ரீகாசி சென்னை.

கிழமைகளிலாவது, அல்லது நான்கு செவ்வாய்க்கிழமைகளிலாவது, கார்த்திகை சோமவாரங்களிலாவது, ஆவணி மாதத்தில் அல்லது புரட்டாசியிலாவது வரும் வளர்பிறை நவராத்திரியிலாவது, தை மாதத்திலாவது அல்லது நித்தியமாவது பூஜை செய்தால், மக்கட்பேறு உண்டாகுமென்பதற்கையமேயில்லை. தேசாந்திரத்திற்குப் போயிருந்தாலும், நிபாந்தாரத்திலிருந்தாலும், கிராமத்திலிருந்தாலும், அல்லது பட்டணத்திலிருந்தாலும், இம்மாதிரி ஒன்பது கன்னியா விக்கிரகங்களைச் செய்து, அவைகட்குப் பூஜை செய்து, முன் சொன்ன விதமாகச் சுமங்கலிகளைப் பூஜை செய்தால் மக்கட்பேறுண்டாகுமென்பது புராணங்களில் விரிவாய்ச் சொல்லப்படுகிறது.

நெடுநாள் பருவமடையாமல் இருக்கிற பெண்கள், முன் சொன்னபடி பூஜை செய்தால் பக்குவதசையடைந்து, புருஷனைச் சேர்ந்து நல்ல பிள்ளைகளைப் பெறுவதுடன் தன் கணவன், மாமன், மாமி, நாத்தி முதலியவர்களுக்கு அன்புடையவள் ஆவாள். * கணவனை விரோதியாகக் கொண்ட பெண் இப்படிப் பூஜை செய்தால், கணவன் விரோதம் நீங்கி அவனைச் சேர்வாள்.

பக்திமான்களோ அல்லது ஸ்திரீகளோ, எவ்விதமும் தீராத நோயுடையவர்களானாலும், இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, மேல்கண்ட ஒன்பது கன்னியர்களுக்கு, விதிப்படி பூஜை செய்தால், ரோகம் தீர்ந்து, ஆரோக்கியமுடையவராய், அறிவையும், பக்தியையும், எங்கேபோனாலும், ஜயத்தையும் அடைவார்கள். இளமைப் பருவத்தில் கணவனை இழந்த கைம்பெண், இதில் ஸ்நானம் செய்து, மேல் கண்ட ஒன்பது கன்னியர்களுக்கு விதிப்படி பூஜை செய்

---

* இந்த வழக்கம் இப்பொழுதும் இவ்விடத்தில் நடந்துகொண்டு வருகிறது. இது மகாமகப் பெண்களுக்குப் படைத்தல் என்று பெயர் பெற்று வழங்கப்பட்டு வருகிறது.

வார்களாகில், எல்லாப் பாவங்களும் நீங்கி, மறு ஜன்மத்தில் தன் கணவனுடன் செவ்வையாக வாழ்வாள்.

இத்தீர்த்தம் புருஷார்த்தங்களைக் கொடுக்கும், எல்லா யாக பலன்களையும், எல்லாத் தீர்த்தங்களிலும், படிந்த பலன்களையும், தரும். எல்லா நோயையும் நீக்கத்தருவது. இதை ஒருதரம் பிரதட்சணம் செய்தால் மேருவை சுற்றிப் பூமியை நூறுதரம் பிரதட்சணம் செய்த பலனையும், ஒருதரம் நமஸ்காரம் செய்தால், கேசவனையும், சிவனையும் நூறுதரம் நமஸ்காரம் செய்த பலன்களையும் அடைவார்கள்.

ஒரு புருஷன் மக்கட்பேற்றை விரும்பினால், மாசி மாதத்தில் ஓர் நாளில், ஐந்து தரம் ஸ்நானம் செய்து, ஒவ்வொரு தடவைக்கும், உலர்ந்த ஆடை உடுத்திக்கொண்டு, புண்டிரம் தரித்து,* ஸ்நானாங்கமாக, மூன்றுதரம் அர்க்கியம் கொடுத்து, நல்ல பழங்களை பிராமணர்களுக்கு தானம் செய்து பிறகும் முன் சொன்னபடி ஸ்நானம் செய்வார்களாகில், நல்ல புத்திரனை அடைவான் என்றும், புராணங்களிலும் விரிவாய் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்தீர்த்தத்தில் யார் ஒருவர் நியம விதிப்படி ஸ்நானம் செய்கிறார்களோ, அவர்கள் தனது ஏழு குலங்களையும் பரிசுத்தமாக்கிக் கொள்ளுகிறார்கள். ஏழு குலங்களாவன: 1. தன் குலம். 2. தன் பெண்ணைக் கொண்டவன் குலம். 3. தாயின் தகப்பன் குலம். 4. சிறிய தாயின் குலம். 5. உடன்பிறந்தாள் குலம். † 6. தந்தையோடு பிறந்தவள்

* புண்டிரம் = ஊர்த்துவபுண்டிரம், திரிபுண்டிரம் என இரண்டு. ஊர்த்துவ புண்டிரம் என்பது நெற்றியில் நெடுக்காக சந்தனம் கோபி மண் முதலியவைகளால் உயர்த்தி இடுவது. திரிபுண்டிரம் என்பது விபூதியால் நெற்றியில் குறுக்கே மூக்கீற்றாக இடுவது என்று அர்த்தம்.

† உடன் பிறந்தாள் குலம் என்றால், தன்னுடன் பிறந்தவர்கள், தன் தாயினுடன் பிறந்தவர்கள், தன் தகப்பனுடன் பிறந்தவர்கள் என மூன்றும் சேர்ந்தது.

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் அவுஸ், ஸ்ரீகாசி சென்னை.

குலம். 7. தன் மாமன் குலம் ஆக ஏழு குலத்தையும் பரிசுத்தமாக்கிக்கொள்ளுகிறான்.

---

## ஆறும்—அத்தியாயம்.

### இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யவேண்டிய நியம விரதங்கள்.

பிரமசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி என்கிற நான்கு ஆசிரமத்தாரில் யாவராயினும், (முதல் நாள்) தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பிராமணர்களைக் கொண்டு புண்ணியாக வாசநம் செய்வித்து, அந்த தீர்த்தத்தால் தன்னைப் புரோக்கணம் செய்து, சுத்தியாக்கிக்கொண்டு, அதில் சிறிது நீர் உட்கொண்டு, பஞ்ச கவ்வியம் சேர்த்து உண்டு, பிறகு, சில அந்தணர்களுக்கு, அறுசுவையோடுகூடிய அன்னம், பாயஸம், பக்ஷணங்கள் முதலியவைகளை வேண்டிய அளவு உண்பித்து, தக்ஷிணை, தாம்பூலம், நூதன வஸ்திரம் முதலியன தானம் செய்து, சந்தனம், புஷ்பம் முதலியவைகளால் செவ்வையாகப் பூஜித்து, வணங்கி, அவர்களிடத்தில் அநுக்கிரகம் பெற்றுக் குருவினிடம் சேர்ந்து, அவரையும் இவ்வாறு பூஜித்து, வணங்கி அவரிடத்தும் உத்தரவுபெற்று, அதைச் சிரங்கொண்டு க்ருஹஸ்தனாயின் புத்திரமித்திர. களத்திர வாகனாதிகளிடத்தில், அதிகப் பற்றில்லாதவனாய், க்ஷேத்திரம், தீர்த்தம், மூர்த்தி இவைகளின் மகத்துவங்களை செவ்வையாய் தெரிந்தவரிடத்தில் கேட்டு, உப்பு, புளி, உறைப்பு முதலிய உருசிகளையும், தாம்பூலம், க்ஷௌரம் பெண்போகம், முதலியவைகளையும், நகம் கிள்ளல், கெட்டவருடன் சேர்ந்து அவருடன் பேசுதல், உருசியான பட்சணம், பழையசாதகம், சூத்திரர், ஸ்திரீ, நாய் இவர்கள் உண்ட மீதி அன்னம், முதலியவைகளை நீக்கி, ஒரு நாளைக்கு ஒருதரமே உண்டு, தரையிற்படுத்து உறங்கி, மறுநாட்காலையில் மகாமக தீர்த்தம்சென்று, ஸ்நானம்செய்து

பிராமணர்களை வணங்கி, தங்கள் வழக்கப்படி ஜபதபங்களைச் செய்து, நித்திய கருமங்களாகிய, அநுஷ்டானங்களை முடித்து, அவ்விடத்திலுள்ள ஆலயங்களில் தெய்வத்தை வணங்கி, காலைகடன் (இது காலை முழுக்கு) செய்யவேண்டியது. நடுப் பகலிலும் இவ்வாறு நீராடி, தேவ தர்ப்பணம், பிதுர்த் தர்ப்பணம், இருஷி தர்ப்பணம், முதலிய தர்ப்பணங்களையும், தீர்த்தத்தில் செய்து, தேவயக்கியம், பூதயக்கிய முதலிய பலி ஹோமங்களைச்செய்து, பிராமணர்களுக்கு அன்னமிட்டு, தானும் ஒரே தரம் ஹவிஸ் உண்டு, அன்று இரவும், தரையில் படுத்து, நித்திரைசெய்து எழுந்து, மூன்றாம்நாள் காலையிலும், தீர்த்தக்கரை சென்று, ஸ்நானம் செய்து, தீர்த்தக் கரையிலுள்ள தேவதைகளையும், தீர்த்த தேவதைகளையும், பிரதக்ஷிண நமஸ்காரம்செய்து, பூஜித்து உபசரித்து, அவர்கள் அநுக்கிரகம் பெற்று, ஒன்பது கன்னியர்கள் இருக்கும் ஆலயத்திற்குச் சென்று, அவர்களை விதிப்படி பூஜித்து, அவ்விடத்திலுள்ள அரசமரத்தை வலம் வந்து, தீர்த்த தேவதைகளை நமஸ்காரம் செய்து, விதிப்படி சங்கல்பம் செய்துகொண்டு, நல்ல பழங்கள், பொன், வெள்ளி முதலிய பொருள்களை கைநிரம்பக்கொண்டு குளத்தில் இட்டு நீராடவேண்டியது. சக்தியிருக்குமாகில், இரண்டு சுளகு (முறம்) களில், இரண்டு இரவிக்கைத் துண்டுகள் வைத்து, அதன்மீது சந்தனம், மஞ்சள், குங்குமம், புஷ்பம், பாக்கு, வெற்றிலை, பொன், வெள்ளி முதலிய நாணயங்கள்வைத்து, தீர்த்த மத்தியில்போட்டும் ஸ்நானம் செய்யலாம், ஸ்நானம் செய்தபின் ஸ்நானாங்கமான தருப்பணங்களைச்செய்து, உலர்ந்த வஸ்திரந் தரித்து, புண்டிரங்களைத்தரித்து, தங்கள் தங்கள் அநுஷ்டானப்படி ஜபம்செய்து, அந்த ஒன்பது கன்னியர்கள் இருக்கும் ஆலயத்திலுள்சென்று, அவ்விடத்திலுள்ள அரச விருக்ஷத்தை பிரதக்ஷிணம்செய்து, அம்மரத்து நிழலிலிருந்து ஒன்பது கன்னிகைகளுக்குத் தனித்தனியே முன்சொன்னபடி, இவ்விரண்டு முறங்களில், பதார்த்தங்கள் நிறைத்துக்கொடுத்து,

பட்டு பீதாம்பர வர்த்தகர்கள், சில்க் அவுஸ், ஸ்ரீகாசி சென்னை.

அவர்களைச் செவ்வையாகப் பூசித்து, தக்ஷிணை, தாம்பூலம், பாயசம் முதலியவைகளைக் கொடுத்து, அவர்களை உண்ணச்செய்யவேண்டியது. பிறகு பிராமணர்களைச் சாப்பிடச்செய்து, கும்பலிங்கேசுவர சாரங்கபாணி, சக்கரபாணி முதலிய ஆலயங்களுக்குச் சென்று, ஸ்வாமிகளை பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து, அர்ச்சனை முதலியன செய்வித்து, அவரவர்கள் வீடு சேர்ந்து, அன்றைக்கும், ஒருதரம் புசித்து, தரையில் உறங்கவேண்டியது.

நான்காநாள் காலையில் எழுந்து, பிதுர் தேவதைகளை உத்தேசித்து, பல் [illegible], சங்கல்பஞ்செய்து, தலைமட்டும் ஸ்நானஞ்செய்து கொண்டு, முழுகி, புண்டிரந்தரித்து, பவித்திரந் தரித்து, பொன் தானஞ்செய்து பால் பழம் இவைகளை உண்டு, அன்றைதினம் அன்னம் அருந்தாமலிருந்து, ஐந்தாநாள் பிதுர் தேவதைகளுக்குப் பிண்டம் கொடுத்துச் சிராத்தம் செய்யவேண்டியது. மகாமகதீர்த்த ஸ்நான அங்கமாகச் செய்யவேண்டிய சிராத்தம் இந்த தச சிராத்தம் தவிர, வேறு அன்னச் சிராத்தமல்ல, இவ்வாறு உண்டு, நான்காநாள் ஸ்நானஞ்செய்யும் விரதத்தையும், ஐந்தாநாள் அதற்கு அங்கமாக பிதுர் தேவதைகளுக்குப் பிரீதியாகத் தீர்த்தச் சிராத்தத்தையும் செய்து, வீடு சேர்ந்து, பிராமண போஜனஞ்செய்வித்துத் தானும் இஷ்டமித்திர பந்து வர்க்கங்களோடு உண்டு, விரத சமாப்தி செய்கிறவர்கள் ஒவ்வொருவரும் இகத்தில் புத்திர பௌத்திர களத்திரர்களுடன் ஐசுவரிய விருத்தியை யடைந்து [illegible], சிவபக்தியையும், ஞானவைராக்கியத்தையும் அடைந்து, பரத்தில் நிரதிசய இன்ப வீடாகிய கைவல்லியத்தையும் அடைவார்கள் என்று புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

[illegible]

MAHAMAHO PADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS 41

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி.